ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2378/37 - 2024 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2024.04.05
2378/37 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/11/2021/CEB/405.

பிரதேச செயலக குறிப்பு இல.: DS/VAV/ADM/LAND/AQ-CEB/KATH.SK.2022/08/01.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**நோக்கம் :- இலங்கை மின்சார சபையின் தூய சக்தி உள் வாங்குகைச் செயற்திட்டத்தின் கீழ் உத்தேச வவுனியா 220/132 அ.வோ.மின் மாற்றுகை உப நிலைய நிர்மாணத்திற்கு வழங்குவ தற்காக.**

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வட மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் காத்தார் சின்னக்குளம் கிராம அலுவலர் பிரிவில் கறுவல்புளியங்குளம் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.12.28 ஆந் திகதிய 950089 ஆம் இலக்க கடத்திரல் வரைபடத்தில் தொகுதி இல. II இல், துண்டு இலக்கங்கள் 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 இனால் காட்டப்பட்ட 6.1314 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் :

01. **துண்டு இல. 2- உரிமை கோருவோர் : S. விதுசன்- விஸ்தீரணம் : 0.5218 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 1 (வீதி (RDA)), துண்டு இல. 264 Topo PP73; கிழக்கு : துண்டு இல. 264 Topo PP73 மற்றும் துண்டு இல. 9; தெற்கு : துண்டு இல. 9 மற்றும் 3; மேற்கு : துண்டு இல. 9 மற்றும் 1 (வீதி (RDA)).

02. **துண்டு இல. 3- உரிமை கோருவோர் : அழகு சிவானந்த குமார் - விஸ்தீரணம் : 0.5969 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 1 (வீதி (RDA)), துண்டு இல. 2; கிழக்கு : துண்டு இல. 2 மற்றும் துண்டு இல. 9; தெற்கு : துண்டு இல. 9, 8 மற்றும் துண்டு இல. 4; மேற்கு : துண்டு இல. 4 மற்றும் 1 (வீதி (RDA)).

03. **துண்டு இல. 4- உரிமை கோருவோர் : த. அமிர்தலிங்கம்- விஸ்தீரணம் : 0.6004 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 1 (வீதி (RDA)), துண்டு இல. 3; கிழக்கு : துண்டு இல. 3, 9 மற்றும் துண்டு இல. 8; தெற்கு : துண்டு


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இல. 8, 7 மற்றும் துண்டு இல. 5; மேற்கு : துண்டு இல. 5 மற்றும் 1 (வீதி (RDA)).

**04. துண்டு இல. 5 - உரிமை கோருவோர் : மனோகரன் மற்றும் அவர் மனைவி, தற்போது விசேட தத்துவ உரிமையாளர் ம. காண்டிபன் - விஸ்தீரணம் : 0.5014 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 1, வீதி (RDA), துண்டு இல. 4; கிழக்கு : துண்டு இல. 4, 8 மற்றும் துண்டு இல. 7; தெற்கு : துண்டு இல. 7 மற்றும் துண்டு இல. 6; மேற்கு : துண்டு இல. 6 மற்றும் துண்டு இல. 1 (வீதி (RDA)).

**05. துண்டு இல. 6 - உரிமை கோருவோர் : இ. இராஜேஸ்வரன் - விஸ்தீரணம் : 0.3212 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 1, வீதி (RDA) மற்றும் துண்டு இல. 5; கிழக்கு : துண்டு இல. 5 மற்றும் துண்டு இல. 7; தெற்கு : துண்டு இல. 7 மற்றும் கறுவல்புளியங்குளம் பகுதியின் Topo PP73 இன் துண்டு இல. 292 இன் ஒரு பகுதி; மேற்கு : Topo PP73 இன் துண்டு இல. 292 இன் ஒரு பகுதி மற்றும் துண்டு இல. 1 (வீதி (RDA)).

**06. துண்டு இல. 7 - உரிமை கோருவோர் : ம. யோகேஸ்வரன் - விஸ்தீரணம் : 0.5915 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல.கள் 5, 4 மற்றும் 8; கிழக்கு : துண்டு இல. 8 மற்றும் 10; தெற்கு : துண்டு இல. 10 மற்றும் கறுவல்புளியங் குளத்தின் ஒரு பகுதி; மேற்கு : கறுவல்புளியங் குளத்தின் ஒரு பகுதி, Topo PP73 இன் துண்டு இல. 293 இன் ஒரு பகுதி மற்றும் துண்டு இல. 6, 5.

**07. துண்டு இல. 8 - உரிமை கோருவோர் : த. பரதலிங்கம் - விஸ்தீரணம் : 0.4985 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 4, 3 மற்றும் 9; கிழக்கு : துண்டு இல. 9 மற்றும் துண்டு இல.10; தெற்கு : துண்டு இல. 10 மற்றும் துண்டு இல. 7; மேற்கு : துண்டு இல. 7, 5 மற்றும் துண்டு இல. 4.

**08. துண்டு இல. 9 - உரிமை கோருவோர் : இனங்காணப்பட வில்லை - விஸ்தீரணம் : 0.4530 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 3 மற்றும் 2 கறுவல்புளியங்குளத்தின் ஒரு பகுதி; கிழக்கு : கறுவல்புளியங்குளத்தின் ஒரு பகுதி, துண்டு இல. 10; தெற்கு : துண்டு இல. 10 மற்றும் 8; மேற்கு : துண்டு இல. 8, 4, 3 மற்றும் 2.

**09. துண்டு இல. 10- உரிமை கோருவோர் : சி. கிருஸ்ண மூர்த்தி மற்றும் மு. தியாகராஜா - விஸ்தீரணம் : 2.0467 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 9, கறுவல்புளியங்குளத்தின் ஒரு பகுதி; கிழக்கு : கறுவல்புளியங்குளத்தின் ஒரு பகுதி; தெற்கு : கறுவல் புளியங்குளத்தின் ஒரு பகுதி; மேற்கு : கறுவல்புளியங்குளத்தின் ஒரு பகுதி மற்றும் துண்டு இல. 7, 8, 9.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும், 2024 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

என். கமலதாசன்,
பிரதேச செயலாளர்,
வவுனியா.

பிரதேச செயலகம்,
வவுனியா,
2024, மாச்சு 27.

EOG 04 - 0036

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 4/1/1/29.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2016/HW/125.

மேற்படி தலைப்பின் கீழ் 2204/26 ஆம் இலக்க மற்றும் 2020.12.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் வ.இல.கு. 2433 இன் துண்டு இல. 143 இனைக் கொண்ட காணியின் விஸ்தீரணம் 0.0038 ஹெக்டயார் ஆக 27A ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நீக்கி விட்டு காணியின் விஸ்தீரணத்தை 0.0041 ஹெக்டயார் ஆக பதிலீடு செய்து அந்த அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது என அறியத் தரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| நீக்கப்பட்ட காணியின் விஸ்தீரணம் | : | 0.0038 ஹெக்டயார் |
| நீக்கப்பட்ட காணியின் விஸ்தீரணத்திற்குப் பதிலாக மாற்றீடு செய்யப்பட்ட காணியின் விஸ்தீரணம் | : | 0.0041 ஹெக்டயார் |

டபிள்யு.எஸ். சேனாதிஸ்ஸ,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
குருநாகல்.

பிரதேச செயலகம்,
குருநாகல்,
2024, மாச்சு 22.

EOG 04 - 0037

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2014/WS/233.
எனது குறிப்பு இல.: KMB/LAN/ACQUI/2/60.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2363/88 ஆம் இலக்க மற்றும் 2023.12.23 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்பட்ட திகதிகள் பின்வருமாறு திருத்தப்பட்டதாக இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதியென்றும் மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சின்தா பீ.டபிள்யூ. வன்னியாரச்சி,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
கம்புறுபிட்டிய.

பிரதேச செயலகம்,
கம்புறுபிட்டிய,
2024, மாச்சு 22.

EOG 04 - 0038

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: DSB/LND/03/F1/35-XXVI-14/2021.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/ 6/ 2019/ எச்டபிள்யு/418.

17.08.2022 ஆம் திகதிய 2293/31 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் பெலியத்த பிரதேச செயலாளர், விசாரணைத் திகதி செல்லாததால் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் காணி எடுக்கப்படுகின்றது, தென் மாகாணம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெலியத்த பிரதேச செயலாளர் பிரிவில் கஹவத்தை கிராமத்தில் அமைந்துள்ள 28.07.2021 ஆம் திகதிய இறுதி கிராம வரைபட இல. 291, பிற்சேர்க்கை இல. 34, தாள் இல. 25 இல் துண்டு இல. 969 இல் விபரிக்கப் பட்டுள்ளது.

2024.04.25 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பெலியத்த பிரதேச செயலகத்தில் மீள்விசாரணை நடைபெறும் மற்றும் வேண்டு கோளுக்கிணங்க சம்பந்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படும் திகதி 18.04.2024 எனத் திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

ஜே. கங்கா றுவன்பத்திரன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
பெலியத்த.

பிரதேச செயலகம்,
பெலியத்த,
2024, மாச்சு 07.

EOG 04 - 0039

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.